# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

தரம்:11 | சைவநெறி | நேரம் : 3.00 மணித்தியாலம்

சுட்டெண்:........................................................................ | 12 | T | I |

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

## பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. “விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்......” என கபில தேவநாயனர் போற்றும் கடவுள்
   1. சிவன் 2. விநாயகர் 3. சக்தி 4. விஷ்ணு

02. “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்பதற்கமைய இறைபணி செய்தவர்
   1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

03. திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் வரையுள்ள நூல்
   1. தேவாரம் 2. திருவாசகம் 3. பெரியபுராணம் 4. கந்தபுராணம்

04. இலங்கையில் மிக உயரமான கொடிமரம் அமைந்துள்ள ஆலயம்
   1. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
   2. ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம்
   3. திருக்கேதீஸ்வரம்
   4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

05. “தன்னை ஒப்பாய் ஒன்றுமில்லாத் தலைமகன்..” என பரம்பொருளைச் சுட்டும் நூல்
   1. திருப்புகழ் 2. திருமந்திரம் 3. திருவருட்பயன் 4. திருவாசகம்

06. உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்தும் கிரியை
   1. கன்னிகாதானம் 2. இரட்சாபந்தனம் 3. மாலைமாற்றுதல் 4. பாணிக்கிரகணம்

07. நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குருப்பட்டம் பெறுவதற்காக செய்யப்படும் கிரியை
   1. ஆசாரிய அபிடேகம் 2. சமயதீட்சை 3. நிர்வாணதீட்சை 4. கும்பஅபிடேகம்

kalvi.lk

08. பிற்கால அர்ச்சனை முறைக்கு வித்திட்ட வேதம்

1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம்

09. ஒரு பாடலின் முடிவுச் சொல் அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்துள்ள நூல். அதன் ஆசிரியர்

1. சகலகலாவல்லிமாலை, குமரகுருபரர் 3. அபிராமிஅந்தாதி, அபிராமிப்பட்டர்

2. பராபரக்கண்ணி, தாயுமானவர் 4. கந்தரலங்காரம், அருணகிரிநாதர்

10. பாலுக்கு அழுத பாலகன் எனக் குறிப்பிடப்படுபவர்

1. சம்பந்தர் 2. மெய்கண்டார் 3. நம்பியாண்டார் நம்பி 4. உபமன்யு

11. சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மீக மார்க்கங்களாக அமைபவை

1. சைவநாற்பாதம் 3. சிவசின்னங்கள்

2. குருலிங்கசங்கம வழிபாடு 4. மேற்கூறிய யாவும் சரி

12. "பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின் வாய்ப்பட்டான் கொல்.." என சூரிய கிரகணம் பற்றிக் குறிப்பிடும் நூல்

1. கலித்தொகை 2. மலைபடுகடாம் 3. திருமந்திரம் 4. சிவஞானசித்தியார்

13. "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்..." என்று வித்யா தானத்தை சிறப்பாகப் போற்றியவர்

1. விபுலாநந்தர் 2. விவேகானந்தர் 3. பாரதிதாசன் 4. மகாகவி பாரதியார்

14. திருக்கோயில்களில் 'திருநந்தவனம்' அமைத்து, தொண்டு செய்து சிவபதம் அடைந்த நாயன்மார்கள்

1. திலகவதியார், திருநாவுக்கரசர், அப்பூதியடிகள்

2. முருகநாயனார், சிவகாமியாண்டவர், நமிநந்தியடிகள்

3. திலகவதியார், முருகநாயனார், சிவகாமியாண்டவர்

4. முருகநாயனார், இளையான்குடிமாறனார், திலகவதியார்

15. திருமந்திரத்தில் அணைந்தோர் இயல்பு பற்றிக் கூறும் தந்திரம்

1. முதலாம் தந்திரம் 3. ஒன்பதாம் தந்திரம்

2. இரண்டாம் தந்திரம் 4. ஐந்தாம் தந்திரம்

16. தேவர்களை சிறைமீட்ட பகுதி அமைந்துள்ள காண்டம், நூல்

1. யுத்தகாண்டம், கந்தபுராணம் 3. தட்சகாண்டம், கந்தபுராணம்

2. யுத்தகாண்டம், இராமாயணம் 4. அசுரகாண்டம், கந்தபுராணம்

17. பிரபோத சைதன்யர் என்ற பிரமச்சாரிய நாமம் கொண்டவர்

1. விவேகானந்தர் 2. விபுலாநந்தர் 3. சிவவாக்கியர் 4. ஆறுமுகநாவலர்

18. பின்வருவனவற்றுள் சிவ விரதங்களில் அடங்காதது

1. சிவராத்திரி 2. கேதாரகௌரி நோன்பு 3. நவராத்திரி 4. திருவாதிரை

19. திருக்கோவில் முக்கியத்துவத்தினை உணர்த்துவது "கோயிலில்லா ஊரில் குடியிருக்க...

1. வேண்டும் 2. முடியும் 3. தக்கது 4. வேண்டாம்

Education கல்வி අධ්‍යාපන

20. பின்வருவனவற்றுள் ஆணவத்தின் குணங்களாக அமைபவை

1. மோகம், மதம், சஞ்சிதம்
2. சோஷம், விஷாதம், பிராரத்தம்
3. ஈதல், வாய்மை, இரக்கம்
4. மோகம், ராகம், வைசித்தரியம்

21. அழிந்து போகின்ற கூத்துக்கலையை ஊக்குவித்து மறுவாழ்வு கொடுத்தவர்

1. சேர்.பொன்.இராமநாதன் 3. சு.வித்தியானந்தன்
2. சு.இராசரத்தினம் 4. ந.ச.பொன்னம்பலப்பிள்ளை

22. சுன்னாகம் வரதபண்டிதர் பாடிய விரத நூலும், மருத்துவநூலும் முறையே

1. சிவராத்திரிபுராணம், ஏகாதசிபுராணம்
2. சிவராத்திரிபுராணம், அமுதாகரம்
3. சிவராத்திரிபுராணம், பிள்ளையார்கதை
4. பிள்ளையார்கதை, சித்திரபுத்தினார்கதை

23. மறைஞானசம்பந்தரின் 'சித்தாந்த ஞான போதம்' என்ற பிரமாண நூலின் மறுபெயர்

1. சைவசமயநெறி 2. சதமணிக்கோவை 3. சிவதர்மம் 4. திருவருட்பயன்

24. எள், கறுப்புத்துணி, நல்லெண்ணெய் என்பவற்றைத் தானம் செய்து அனுட்டிக்கப்படும் விரதம்

1. புரட்டாதி மகாளயம் 3. புரட்டாதிச்சனி
2. புரட்டாதி நவராத்திரி 4. புரட்டாதிப் பூரம்

25. கோட்டை நகரில் அமைந்திருந்த முருகன் கோயில் பற்றிய செய்திகளை அறிய உதவும் சான்று

1. வேல் சின்னம் நந்திக் கொடிகள் 3. சேவல் சின்னம் கொண்ட கொடிகள்
2. சேவலும் மயிலும் இணைந்த கொடிகள் 4. வேல் சின்னம் நடராஜக் கொடிகள்

26. நாவுக்கரசருக்கு குரு தீட்சை வழங்கியவர்

1. சிவபெருமான் 2. திலகவதியார் 3. மங்கையர்க்கரசியார் 4. புகழனார்

27. சிவனின் அட்ட வீரச் செயல்கள் இடம் பெற்ற தலம்

1. திருவீரட்டானேஸ்வரம் 3. திருக்கேதாரம்
2. திருப்பெருமணநல்லூர் 4. திருவாரூர்

28. தேர் வடிவமைக்கும் முறையைக் கூறும் நூல்

1. விஷ்ணுதர்மோத்திரம் 3. மானசாரம்
2. சில்பரத்தினம் 4. புராணம்

29. "சத்யம் வத" என்னும் உபநிடதக் கூற்று குறித்து நிற்கும் விழுமியம்

1. பொறுமை 2. ஈகை 3. அன்புடைமை 4. வாய்மை

30. "தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் செய்யப்படும் பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றும் காக்கும்" எனக் குறிப்பிடும் புராணம்

1. சிவபுராணம் 2. விஷ்ணு புராணம் 3. கருடபுராணம் 4. வாயுபுராணம்

31. உப ஆகமங்களின் எண்ணிக்கை

1. 28 2. 207 3. 110 4. 97

kalvi.lk

32. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் மூவகை ஆன்மாக்கள்

1. பதி, பசு, பாசம்
3. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்
2. ஆணவம், கன்மம், மாயை
4. மனம், வாக்கு, காயம்

33. கன்மேந்திரியங்களாவன

1. மெய், வாய், கண், மூக்கு, செவி
3. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
2. கை, கால், நா, எருவாய், கருவாய்
4. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

34. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" எனக் குறிப்பிடும் வழிபாடு

1. குருவழிபாடு
2. இலிங்கவழிபாடு
3. சங்கம வழிபாடு
4. ஆலயவழிபாடு

35. இந்து இல்லத்தை அடையாளப்படுத்துவன

1. துளசிமாடம், மாக்கோலம்
2. ஆஞ்சநேயர்படம், துளசிமாடம்
3. திருஷ்டி விநாயகர்படம், ஆஞ்சநேயர்படம்
4. நாய் கடிக்கும் கவனம் பதாகை, பூங்கொடிகள்

36. உலகப் பெருமஞ்சம் அமைந்துள்ள ஈழத்து ஆலயம்

1. நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்
2. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்
3. இணுவில் கந்தசுவாமி ஆலயம்
4. பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம்

37. சிவபெருமான் சிறு குழந்தையாக மண்டோதரியின் மடியில் (வேண்டுகோளுக்கு இணங்க) தவழ்ந்த கதையினைக் குறிப்பிடும் புராணம்

1. விஷ்ணுபுராணம்
3. திருக்கரசைப்புராணம்
2. உத்தரகோசமங்கை தலபுராணம்
4. தட்சணகைலாசபுராணம்

பின்வரும் தகவலை உடைய அட்டவணையிலிருந்து 38, 39, 40 ஆகிய வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க

| | | |
|---|---|---|
| A-மட்டிட்டபுன்னை | B-மெய்கண்டார் | C-மல்லிகை |
| D-தாமரை | E-பொற்றாளம் பெற்றமை | F-ஐப்பசி சுவாதி |
| G-சிவஞானபோதம் | H-வைகாசி மூலம் | I-கொன்றை |

38. திருஞான சம்பந்தருடன் தொடர்புடைய தொகுதி

1. A,B,C
2. A,E,F
3. A,H,F
4. A,E,H

39. கொடிப்பூ, நீர்ப்பூ கோட்டுப்பூ என அமையும் தொகுதி

1. A,C,F
2. E,D,I
3. C,D,E
4. C,F,I

40. சந்தான குரவர்களுடன் தொடர்புடைய தொகுதி

1. B,E,I
2. A,G,H
3. B,G,F
4. B,H,I

(40X1 = 40)

Education கல்வி

kalvi.lk

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

| தரம்:11 | சைவநெறி | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:.......................................................................... | 12 | T | II |

**கவனிக்க:**

I. முதலாம் வினா கட்டாயமானது, ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

## பகுதி – II

**1. சுருக்கமான விடை எழுதுக.**

01. திருமுறைகளில் விநாயகரைப் போற்றிப் பாடிய இருவரின் பெயரை எழுதுக.
02. நித்திய அன்னதானப்பணி இடம் பெறும் ஆலயங்கள் எவை?
03. விபூதியின் மறு பெயர்கள் இரண்டு எழுதுக.
04. நீங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கும் விழுமியங்கள் நான்கு எழுதுக.
05. கடமை விரதங்கள் எவை?
06. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
07. உமாபதிசிவாச்சாரியார் பாடிய சிந்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்கள் நான்கு தருக.
08. நாகதம்பிரான் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகள் நான்கு தருக.
09. நாட்டார் கலைகளை மெருகூட்டும் இசைக்கருவிகள் நான்கு தருக.
10. அட்டாங்க யோகத்துள் அடங்கும் படி நிலைகள் நான்கு தருக.

(10X2 = 20 புள்ளிகள்)

**2.**

01. கீழ்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
02. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
    1. "அந்தணாளன் உன்...."
    2. "பால்நினைந்தூட்டும்....."
    3. "கற்றவர் விழுங்கும்....."
    4. "சிந்திக்கிலேன்......"
    5. "உண்ணும் சோறும்....."

(5X2 = 10 புள்ளிகள்)

kalvi.lk

3. “இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்

அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்

சுந்தரத் திருத் தொண்டத் தொகைத் தமிழ்

வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம்”

01. இப்பாடல் இடம்பெறும் நூல், ஆசிரியர் பெயரினைக் குறிப்பிடுக.

02. இப்பாடலில் இடம் பெறும் சமயகுரவர், அவருடைய பதிகம் என்பவற்றைத் தருக?

03. இப்பாடல் இடம் பெறும் நூலில் கூறப்படும் சிவனடியார் சிறப்பினை விளக்கி எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

4. “நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே.....”

01. இவரின் பெற்றோர் பெயர், பிறந்த இடம் என்பவற்றைக் குறிப்பிடுக.

02. இவர் **முதன்முதல்** பிரசங்கம் செய்த ஆலயம், காலம், முதலில் ஆரம்பித்த கல்வி நிலையம், காலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

03. நாவலருடைய சைவசமயப் பணிகள் மூன்றினை விளக்கி எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

5. “இலங்கையில் சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் சைவ சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன”

01. 19ம் நூற்றாண்டில் ஈழத்தில் தோற்றம் பெற்ற சமய நிறுவனங்கள் நான்கு தருக.

02. சைவ பரிபாலன சபையின் நோக்கங்கள் மூன்று எழுதுக.

03. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் மூன்றினை விளக்கி எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

6. “வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது”

01. வாதவூரன் எனக் குறிப்பிடப்பட்ட சமயகுரவர் யார்? அவர் விளம்பிய நூல் எது?

02. இக்குரவர் நின்ற நெறி, மார்க்கம், முத்தி என்பவற்றைத் தருக.

03. மேற்குறிப்பிடப்பட்ட நாயனாரின் சமயப் பணிகள் மூன்றினை விளக்கமாக எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

01. நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

02. குங்கிலியக்கலய நாயனார்

03. ஈழத்தில் வைரவ வழிபாடு

04. மகோற்சவம்

(5X2 = 10 புள்ளிகள்)

kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page